**கவனிக்க.**- 2026.05.15 ஆந் திகதிய 2489 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I V (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2490 - 2026 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2026.05.22

2490 ஆம் இலக்கம் - 2026 ஆம் மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1354 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1368 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

### நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் உதவி/ பிரதிப் பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் உதவி/ பிரதி பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்காக உள்ள 02 வெற்றிடங்களுக்கான தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கான தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி ஆட்சேர்ப்பு செய்யும் விதம்** :

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக் குழுவின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் வழங் கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

02. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

2.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும், விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.2 இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தி யோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று வருட (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.3 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்திற்கான மொழி தொடர்பான தகுதிகளை அடைய வேண்டும்.

2.4 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

2.5 ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகி இருத்த லாகாது.

3. **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I உப பிரிவுக்கு ஏற்ப இப்பதவியின் மாதாந்த அளவு திட்டமானது ரூ. 82,510.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூ. 195,970.00 – (SL 1 - 2025) ஆகும்.

அத்துடன் சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் II உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத் திற்கு காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகுதிகள்:**

4.1 உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியபிரமாணம் செய்திருத்தல்.

4.2 **அனுபவம் :**

சட்டத்தரணியாக 06 மாத கால செயற்பாட்டு ரீதியிலான அனுபவத்தை பெற்றிருத்தல்.

4.3 **வயதெல்லை :**

2025.11.07 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

4.4 **உடற்தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவிக் குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5 **ஏனைய தகைமைகள் :**

2025.11.07 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பப் படிவங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இருக்க வேண்டிய 4.1 தொடக்கம் 4.5 வரையான அனைத்து தகைமைகளும் சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முக பரீட்சையின் பெறுபேற்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :

| | பரீட்சை புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | புள்ளிகள் வீதம் | சித்தியடைய தேவையான அதிகுறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்கள் மத்தியில் திறமை அடிப்படையில் ஆட் சேர்ப்பு செய்யப்படும். |
| 02 | மேலதிக தொழிற் தகைமைகள் | 10 | |
| 03 | மேலதிக அனுபவம் | 20 | |
| 04 | கணினி அறிவு/ கணினி உபயோகிக்கும் ஆற்றல் | 15 | |
| 05 | மொழித்திறன்/ மொழித் தேர்ச்சி | 15 | |
| 06 | நேர்முக பரீட்சையில் காட்டும் திறமை | 20 | |
| மொத்த புள்ளி | | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை** :

விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டும் என்பதுடன் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். எல்லா விடயங்களும் தெளிவாக பூரணப்படுத்தப்படல் வேண்டும். சலக விதங்களிலுலம் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

07. **விண்ணப்பப்படிவத்தை அனுப்புதல்** :

இவ் அறிவித்தலில் கடைசியில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2026.06.09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
த. பெ. இல. 573,
புதுக்கடை,
கொழும்பு.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 2026.06.09 ஆகும். உரிய தினத்திற்குள் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. தற்போது அரசாங்க சேவையில் (திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை/ சிவில் நிறுவனங்கள்) பணிபுரியும் உத்தியோகத்தர்கள், அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்ற அத்தாட்சியுடன் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவி/ பிரதி பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிக்கிடையில் ஏதாவது இணக்கபாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2026, மே 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) [ ]

**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் உதவி/ பிரதிப் பணிப்பாளர் (விசாரணைகள்) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025**

01. தனிப்பட்ட தகவல்கள் :

1.1 முழுப்பெயர் (தமிழ்) : ....................................................................................................................

1.2 முழுப்பெயர் (ஆங்கிலம்) : ....................................................................................................................

1.3 பெயர் முதல் எழுத்துக்களுடன் (தமிழ்) :....................................................................................................

1.4 பெயர் முதல் எழுத்துக்களுடன் (ஆங்கிலம் ) :..............................................................................................

1.5 நிரந்தர முகவரி (தமிழ்) :....................................................................................................................
....................................................................................................................

1.6 நிரந்தர முகவரி (ஆங்கிலம்) :....................................................................................................................
....................................................................................................................

1.7 பால் (பெண்/ ஆண்) :....................................................................................................................
....................................................................................................................

1.8 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :..........................................................................................................
....................................................................................................................

1.9 தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................................................

1.10 பிறந்த திகதி வருடம்:................... மாதம் :............................................ திகதி:.......................................................

1.11 விண்ணப்ப இறுதி திகதிக்கு வயது :

வருடங்கள் :.............................. மாதங்கள் :................................. நாட்கள் :...............................................

1.12 தொலைபேசி இலக்கம் (நிரந்தரமானது) :................................... கையடக்கம் :.....................

1.13 மின்னஞ்சல் முகவரி :...........................................................................................................

02. தற்போது வகிக்கும் பதவி சம்பந்தமான தகவல்கள் : (இருப்பின்)

2.1 தற்போது வகிக்கும் பதவி :...............................................

2.2 நியமனத் திகதி :...............................................

2.3 நியமனத்தின் வகை (நிரந்தரம், தகுதிகாண் நிலை) :...............................................

03 கல்வித் தகைமைகள் : (தகைமைகளை சான்றுபடுத்துவதற்காக குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

3.1 உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி :...............................................

3.2 செயற்பாட்டு ரீதியிலான தொழிலில் ஈடுபட்டுள்ள காலம் :...............................................

04. தொழிற் தகைமைகள் : ...............................................................................................................................................

05. வேறு தகைமைகள் :...................................................................................................................................................

06. பிரத்தியேக தகவல்கள் விசாரிக்கக்கூடியவர்கள் :

6.1.1 பெயர் :...................................................................................................................................................

6.1.2 முகவரி :................................................................................................................................................

6.1.3 தொழில் :................................................................................................................................................

6.1.4 உங்களை அறிந்துள்ள காலம்:..................................................................................................................

6.2.1 பெயர் :...................................................................................................................................................

6.2.2 முகவரி :................................................................................................................................................

6.2.3 தொழில் :................................................................................................................................................

6.2.4 உங்களை அறிந்துள்ள காலம்:..................................................................................................................

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்படி விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உண்மையானவை என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனின் நேர்முக பரீட்சைக்கு முன்னரோ, நேர்முக பரீட்சையிலோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தத் தன்மையை இல்லாமல் செய்யக்கூடிய ஏதேனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்.

.................... ......................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................... ஐ நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ......................... ஆந் திகதி அவர் கையொப்பமிட்டார் என்பதை உறுதி செய்கிறேன்.

...............................................

கையொப்பத்தை உறுதி செய்யும் உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி :...............................................
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : ......................................................
முகவரி : ...................................................
(பதவி முத்திரை இடவும்)

09. திணைக்களத் தலைவரின் விதந்துரை :

திரு./திருமதி/செல்வி ........................................................................ யின் விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். அவர் இத் திணைக்களத்தில்/ அமைச்சில் நிரந்தரமாக சேவையாற்றுபவர் என்றும், இப்பதவிக்குரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கிறது/ இருக்கவில்லை என்றும் அவர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

..............................................................................................
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :..............................................................
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :..............................................................
பதவி :..............................................................
முகவரி :..............................................................
(பதவி முத்திரை இடவும்)

05-258/1

---

## நீதிச்சேவை ஆணைக்குழு

### நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2025

நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்காக உள்ள 04 வெற்றிடத்திற்கு தகுதியானவரைத் தெரிவு செய்வதற்கான தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி ஆட்சேர்ப்பு செய்யும் விதம்** :

நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சையின் குழுவின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் வழங் கப்படும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

02. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்** :

2.1 இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித் துடையதுமாகும், விதவைகள் மற்றும் அநாதைகள்/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.2 இப்பதவிக்கு நியமனம் பெறுகின்ற உத்தி யோகத்தர்கள் மூன்று வருட (03) நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அந்த மூன்று (03) காலத்தினுள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.3 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைக்கு அமைய உரிய மட்டத்திற்கான மொழி தொடர்பான தகுதிகளை அடைய வேண்டும்.

2.4 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகள் என்பவற்றிற்கு இந்நியமனம் உட்பட்டதாக இருக்கும்.

2.5 ஒழுக்காற்று நடவடிக்கை பெற்று இருக்கலாகாது.

3. **சம்பள அளவுத்திட்டம்** :

25.03.2025 ஆந் திகதிய 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் I உப பிரிவுக்கு ஏற்ப இப்பதவியின் மாதாந்த அளவு திட்டமானது ரூ. 58,660.00 - 10 x 1,190 - 11 x 1,360 - 15 x 1,670 - ரூ. 110,570.00 – (MN 5 - 2025) ஆகும்.

அத்துடன் சம்பளம் வழங்கப்படுவது அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு ஏற்ப அதன் II உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் காலத் திற்கு காலம் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித் தாகும்.

04. **ஆட்சேர்ப்புக்கான தகுதிகள்:**

4.1 பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெறப் பட்ட சட்டம், குற்றவியல் மற்றும் சமூகவியல் தொடர்பான பட்டத்தை பெற்றிருத்தல்.

4.2 **அனுபவம் :**

ஒரு (01) வருட கால தொழில் ரீதியிலான அனுபவத்தை பெற்றிருத்தல்.

4.3 **வயதெல்லை :**

07.11.2025 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருத்தல் வேண்டும்.

4.4 **உடற்தகைமைகள்** :

அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

4.5 **ஏனைய தகைமைகள் :**

07.11.2025 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்ட அறிவித்தலுக்கு மேலதிகமானதாகும்.

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உள்ள வராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரரின் குடும்பத்தினர் எவரேனும் இலங்கை சட்டத்தின் கீழ் எந்தவொரு குற்றத்திற்கும் குற்றவாளியாக ஆக்கப் பட்டிருத்தலாகாது.

IV. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் அறி வித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இருக்க வேண்டிய 4.1 தொடக்கம் 4.5 வரையான அனைத்து தகைமைகளும் சகல விதங்களிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

V. பாதுகாப்புத் தடைவிலக்கல் அறிக்கைகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறு பேற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். புள்ளிகள் வழங்கப்படும் விதம் கீழே அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது :

| | பரீட்சைப் புள்ளிகள் வழங்கப்படும் விடயங்கள் | புள்ளிகள் வீதம் | சித்தியடைய தேவையான அதி குறைந்த புள்ளி மட்டம் |
|---|---|---|---|
| 01 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | அதிகூடிய புள்ளிகளை பெற்றவர்கள் மத்தியில் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். |
| 02 | மேலதிக தொழிற் தகைமைகள் | 10 | |
| 03 | மேலதிக அனுபவம் | 20 | |
| 04 | கணினி அறிவு/ கணினி உபயோகிக்கும் ஆற்றல் | 15 | |
| 05 | மொழித்திறன்/ மொழித் தேர்ச்சி | 15 | |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 20 | |
| | மொத்தப் புள்ளி | 100 | |

06. **விண்ணப்பிக்கும் முறை** :

விண்ணப்பப்படிவம் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமைய வேண்டும் என்பதுடன் A4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டும். எல்லா விடயங்களும் தெளிவாக பூரணப்படுத்தப்படல் வேண்டும். சலக விதங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

07. **விண்ணப்பப் படிவத்தை அனுப்புதல்** :

இவ் அறிவித்தலில் கடைசியில் இருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 09.06.2026 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு செயலகம்,
த. பெ. இ. 573,
புதுக்கடை,
கொழும்பு.

08. விண்ணப்ப முடிவுத் திகதி 09.06.2026 ஆகும். உரிய தினத்திற்குள் தகைமைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

09. தற்போது அரசாங்க சேவையில் (திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை/ சிவில் நிறுவனங்கள்) பணி புரியும் உத்தியோகத்தர்கள், அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்ற அத்தாட்சியுடன் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" என்று தெளிவாக குறிப்பிட வேண்டும்.

(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்ற இவ்வறிவித்தலில் மொழிக்கிடையில் ஏதாவது இணக்கபாடின்மை காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலே சரியானதாக கருதப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.)

நீதிச் சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

பிரசன்ன அல்விஸ்,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2026, மே 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) [ ]

**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தின் விசாரணை அதிகாரி தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2025**

01. தனிப்பட்ட தகவல்கள் :

1.1 முழுப்பெயர் (சிங்களம்) : ..........................................................................................................

1.2 முழுப்பெயர் (ஆங்கிலம்) : ..........................................................................................................

1.3 பெயர் முதல் எழுத்துக்களுடன் (சிங்களம்) :..........................................................................................

1.4 பெயர் முதல் எழுத்துக்களுடன் (ஆங்கிலம் ) :..........................................................................................

1.5 நிரந்தர முகவரி (சிங்களம்) :..........................................................................................................
..........................................................................................................

1.6 நிரந்தர முகவரி (ஆங்கிலம்) :..........................................................................................................
..........................................................................................................

1.7 பால் (பெண்/ ஆண்) :..........................................................................................................
..........................................................................................................

1.8 விவாகமானவர்/ விவாகமாகாதவர் :..........................................................................................
..........................................................................................................

1.9 தேசிய ஆளடையாள அட்டை இல. : ..........................................................................................

1.10 பிறந்த திகதி வருடம்:................... மாதம் :............................................ திகதி:........................................................

1.11 விண்ணப்ப இறுதி திகதிக்கு வயது :
வருடங்கள் :............................. மாதங்கள் :................................ நாட்கள் :...............................................

1.12 தொலைபேசி இலக்கம் (நிரந்தரமானது) :.................................. கையடக்கம் :....................

1.13 மின்னஞ்சல் முகவரி :..........................................................................................................

02. தற்போது வகிக்கும் பதவி சம்பந்தமான தகவல்கள் : (இருப்பின்)

2.1 தற்போது வகிக்கும் பதவி :................................................

2.2 நியமனத் திகதி :................................................

2.3 நியமனத்தின் வகை (நிரந்தரம், தகுதிகாண் நிலை) :................................................

03 கல்வித் தகைமைகள் : (தகைமைகளை சான்றுபடுத்துவதற்காக குறித்த ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

| தொடர் இல. | பட்டம் | பல்கலைக்கழகம் | பட்டம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

04. வேறு கல்வித் தகைமைகள் :

| தொடர் இல. | தகைமை | நிறுவனம் | தகைமை பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

05. தொழிற் தகைமைகள் :

| தொடர் இல. | தகைமை | நிறுவனம் | தகைமை பெற்ற திகதி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

06. வேறு தகைமைகள் :................................................................................................................................................

07. பிரத்தியேக தகவல்கள் விசாரிக்கக்கூடியவர்கள் : ................................................................................................

7.1.1 பெயர் :................................................................................................................................................

7.1.2 முகவரி :................................................................................................................................................

7.1.3 தொழில் :................................................................................................................................................

7.1.4 உங்களை அறிந்துள்ள காலம்:................................................................................................................

7.2.1 பெயர் :................................................................................................................................................

7.2.2 முகவரி :................................................................................................................................................

7.2.3 தொழில் :................................................................................................................................................

7.2.4 உங்களை அறிந்துள்ள காலம்:................................................................................................................

08. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

மேற்படி விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப உண்மையானவை என்பதையும், இங்கு குறிப்பிடப்பட்ட விபரங்கள் பொய்யானவை எனின் நேர்முகப் பரீட்சைக்கு முன்னரோ, நேர்முகப் பரீட்சையிலோ அல்லது அதன் பின்னரோ எனது பரீட்சார்த்தத் தன்மையை இல்லாமல் செய்யக்கூடிய ஏதேனும் தீர்மானத்திற்கு நான் உடன்படுகிறேன்.

..................... .....................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

09. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வியை ....................................... நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் .......................... திகதி அவர் கையொப்பமிட்டார் என்பதை உறுதி செய்கிறேன்.

...............................................
கையொப்பத்தை உறுதி செய்யும் உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி :...............................................
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ............................
பதவி : .....................................................
முகவரி : ...................................................
(பதவி முத்திரை இடவும்)

10. திணைக்களத் தலைவரின் விதந்துரை:

திரு./திருமதி/செல்வி ....................................................................... யின் விண்ணப்பத்தை முன்வைக்கின்றேன். அவர் இத் திணைக்களத்தில்/ அமைச்சில் நிரந்தரமாக சேவையாற்றுபவர் என்றும், இப்பதவிக்குரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை இருக்கிறது/ இருக்கவில்லை என்றும் அவர் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

...............................................................................................
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :..............................................................
அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :.............................................................
பதவி :.............................................................
முகவரி :.............................................................
(பதவி முத்திரை இடவும்)

05-258/2

## இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடமாகவுள்ள **உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்** பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.06.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத்தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

1. **உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி (வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01)**

1.1 **பணியின் தன்மை :**

- ஆராய்ச்சிகளுக்குரிய தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் ஒரு தரவுத் தளத்தைப் பேணி வருதல்.
- பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் தொடர்பாக பின்னணிக் குறிப்புக்களைத் தயாரித்தல்.
- ஆராய்ச்சி நோக்கங்களுக்காக தரவுப் பத்திரங்களையும், புள்ளிவிபர பிரித்தெடுப்புக்களையும் தயாரித்தல்.
- ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்.
- ஆராய்ச்சி நோக்கங்களுக்காக பல்வேறு ஆராய்ச்சி ஆவணங்களைப் ஆய்வுசெய்தல் மற்றும் அவற்றிலிருந்து உரிய தகவல்களைப் பிரித்தெடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச மன்றங்கள், ஆய்விதழ்கள், சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளுக்காக ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தயாரிக்கும் போது ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்.

1.2 **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 69,370.00 - 12 x 1,360 - ரூபா 85,690.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 115,000.00 ஆகும்.)

1.3 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்ப தாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

1.4 **தகைமைகள்:**

1.4.1 **கல்வி** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பொருளியல், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், சட்டம், முகாமைத்துவம்/புள்ளிவிபரவியல் ஆகிய எந்தவொரு பாடத்திலும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

1.4.2 **அனுபவம்:** மேலே குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்த பின்னர், அரசாங்க/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று (03) வருட ஆராய்ச்சி அனுபவம் பெற்றிருத்தல்.

1.5 **ஆட்சேர்ப்பு முறை:**

எழுத்து மூலப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை திறன்களின் பிரகாரம் ஆகும்.

1.6 **பரீட்சை நடைமுறை :**

1.6.1 **எழுத்துமூலப் பரீட்சை:** தொழிலின் பணிகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக விண்ணப்பதாரியின் அறிவும் புரிதலும் பரீட்சிக்கப்படுவதோடு இதில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

1.6.2 **நேர்முகப் பரீட்சை**: பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

1.6.3 எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சையின் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இதன்போது பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| | *அளவுகோல்கள்* |
|---|---|
| i. | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| ii. | தொழில் அனுபவம் |
| iii. | சேவை செயலாற்றுகை (ஆராய்ச்சிக் கட்டுரைகள்) |
| iv. | தொடர்பாடல் திறன்கள் மற்றும் மொழித் தேர்ச்சி |
| v. | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

2. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

2.1 இந்தப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர் காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவை யிலோ/ மாகாண அரசாங்க சேவையிலோ ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவை நிரந்தர மாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

2.2 நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப் பாதிருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

2.3 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளு மன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதி களுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.

2.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங் கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

2.5 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத் துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

2.6 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக் கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

3. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப் பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

4. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர் புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

5. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித் தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

6. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தேர்ந் தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப் பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் (தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் சேவை செய்பவராயின்) நிராகரிக்கப்படும். விண்ணப் பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப்

பின்னர் திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும், பதவிக்கான மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

8. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

ஹன்ச அபேரத்ன,
ப.க பாராளுமன்ற செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2026, மே 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

**உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..............................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ..............................................................
.......................................................................................................................
.......................................................................................................................

(இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (Mr./Mrs. /Miss) ………………….........................
.......................................................................................................................
.......................................................................................................................

02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

03. (அ) (i) தனிப்பட்ட முகவரி : ..............................................................................
.......................................................................................................................
.......................................................................................................................

(ii) தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iii) Whatsapp தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iv) மின்னஞ்சல் (e-mail) முகவரி: ........................................................

(ஆ) (i) அலுவலக முகவரி: ..............................................................................
.......................................................................................................................

(ii) அலுவலக தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(இ) அனுமதி அட்டையை தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி:- …………………………………………..
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது:

வருடங்கள்: ............ மாதங்கள் :............. நாட்கள்:...........

05. சிவில் அந்தஸ்து: (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால்: (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| (அ) க.பொ.த.(சாதாரண தரம்) | | |
|---|---|---|
| *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
| சிங்களம்/தமிழ் | | |
| ஆங்கிலம் | | |
| கணிதம் | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| (ஆ) க.பொ.த.(உயர் தரம்) | | |
|---|---|---|
| *பாடம்* | *சித்தி* | *ஆண்டு* |
| | | |
| | | |
| | | |
| | | |

(இ) பட்டம் பற்றிய விபரங்கள் :

(i) பட்டம் பெற்ற திகதி : .......................................................
(ii) பல்கலைக்கழகம் /நிறுவனம் : .......................................................
(iii) பட்டம் : .......................................................
(iv) பாடங்கள் : .......................................................

09. தொழில்சார் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பாடநெறி* | *நிறுவனம்* | *காலப் பகுதி* | *செயல் வலுப்பெறும் திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |

11. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (உரிய ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.) :

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி:……………………………………………
(ஆ) முதல் நியமனத் திகதி:…………………………………………………………
(இ) தற்போது வகிக்கும் பதவி:.............................................................................
(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம்:………………………………………………
(உ) கொடுப்பனவுகள்:.............................................................................................
(ஊ) முழுமொத்த சம்பளம்:.....................................................................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
.......................................................................................................................................................

14. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை)
அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக:
.......................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவை யெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: .........................................

................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள / நிறுவனத் தலைவரின் விதப்புரை**

(அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில்.................................................................. பதவியை வகிக்கின்ற திரு./திருமதி/செல்வி ..................... .................................................................... அவர்களின் விண்ணப்பத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், அவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிசெய்கின்றேன். அவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாராயின், அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. (தயவு செய்து பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

திகதி: .....................................

.....................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ முத்திரை)

05-324

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## நான்கு வருட முன் சேவை கல்விமாணி (ஆங்கில மொழிமூலம்) பட்டத்தைத் தொடர்வதற்காக, 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உ/தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் 210 ஆசிரிய பயிலுநர்களை குளியாப்பிட்டிய, தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிக்கு அனுமதித்தல் - 2026

1.0 தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியற் கல்லூரியில் நான்கு வருட முன் சேவைக் கல்விமாணி (ஆங்கில மொழிமூலம்) பட்டத்தைத் தொடர்வதற்காக ஆட்சேர்ப்பதற்கு அவசியமான கல்வித் தகைமைகள் மற்றும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றி, 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பிரதான பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்த விண்ணபதாரர்கள் இதற்கு விண்ணபிக்க முடியும்.

1.2 ஒரு விசேட சந்தர்ப்பமாகக் கருதி, “மூன்று வருட முன் சேவை தேசிய போதனாவியல் டிப்ளோமா பாடநெறியைத் தொடர்வதற்காக 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரிய பயிலுநர்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆட்சேர்த்தல் - 2025” எனும் தலைப்பில் 2025.11.07 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் தகைமைகளுக்கு அமைய விண்ணப்பித்த விண்ணபதாரர்களும் இப்பாடநெறிக்கு விண்ணப் பிக்க முடியும்.

1.3 அனைத்து விண்ணபதாரர்களும் நிகழ்நிலை முறைமையினூடாக (Online System), வர்த்தமானி அறிவித்தலின் 9.0 இல் உள்ள “விண்ணப்பிப்ப தற்கான அறிவுறுத்தல்கள்” எனும் பந்தியில் குறிப் பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விண்ணபித்தல் வேண்டும்.

1.4 வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி யிலிருந்து 2026.06.10 ஆம் திகதி வரை விண்ணப் பித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நன்கு வாசித்து புரிந்துகொண்டு, அதற்கமைய நிகழ்நிலை (Online) ஊடாக விண்ணப்பிக்கும் பொறுப்பு விண்ணப்ப தாரரைச் சார்ந்ததாகும். உரிய காலப்பகுதிக்குள் சரியாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாகப் பின்னர் முன்வைக்கப்படும் கோரிக் கைகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

1.6 விண்ணப்பிப்பதற்கு முன்னர் வர்த்தமானி அறிவித் தலின் 12.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாறு, ஒவ்வொரு பாடநெறிக்கும் 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப் படையில் ஆட்சேர்க்கப்படவுள்ள விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தி, மாவட்ட அடிப்படையிலும் தேசிய அடிப்படையிலும் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறித்துத் தெளிவான புரிதலைப் பெற்று விண்ணபித்தல் வேண்டும்.

2.0 **தகுதிகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் -

2.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

2.2 நற்பண்புகளைக் கொண்டவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

2.3 2026.01.01 ஆம் திகதியன்று 25 வயதிற்கு மேற் படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4 திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

3.0 **அடிப்படை கல்வித் தகைமைகள்:**

3.1 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணபதாரர்களும் கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காகக் கீழே தரப் பட்டுள்ள 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

3.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 4.0 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பிரதான பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

3.3 விண்ணபதாரர்கள் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியுடன், மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பது கட்டாயமாகும். இத்தகைமைகளை இரு அமர்வுகளில் பூர்த்தி செய்வதாயின், பரீட்சைக்குத் தோற்றிய முதல் அமர்வில் மொழி (சிங்கள மொழி / தமிழ் மொழி) உட்பட ஐந்து (05) பாடங்களில் சித்தியுடன், மூன்று (03) திறமைச் சித்திகளைப் பெற்றிருப்பது கட்டாயமாகும். அத்துடன், க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியப் பாடத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு சாதாரண சித்தியையாவது பெற்றிருப்பது கட்டாயமாகும்

3.4 ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான விசேட தகைமைகள் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கருத்தில் கொள்க:**

(அ) க.பொ.த. (சாதாரண தர) பாடத்திட்டத்தின் கீழ் பின்வரும் பாடங்கள் கருத்திற் கொள்ளப்படும்.

**பிரதான பாடங்கள் :**

(i) சமயம் (ii) சிங்கள மொழியும் இலக்கியமும்/ தமிழ் மொழியும் இலக்கியமும் (iii) ஆங்கில மொழி (iv) கணிதம் (v) வரலாறு (vi) விஞ்ஞானம்

**தொகுதிப் பாடங்கள்:**

(i) முதலாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்
(ii) இரண்டாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்
(iii) மூன்றாவது பாடத் தொகுதியிலுள்ள பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடம்

3.5 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் அனைத்துக் கல்வி மற்றும் ஏனைய சான்றிதழ்களதும் செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி (2026/06/10) அன்றோ அல்லது அதற்கு முன்னரோ இருத்தல் வேண்டும்.

4.0 **ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள்:**

பின்வரும் விடயங்கள் குறித்து தங்களது விசேட அவதானத்தைச் செலுத்துவது முக்கியமாகும்.

**கருத்தில் கொள்க :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பாடநெறிக்கும் தேவையான தகைமைகள் குறித்து மிகவும் தெளிவான புரிதலைப் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலே 3.0 இன் 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவை கல்வியியல் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக க.பொ.த. (உயர்தரம்) மற்றும் (சாதாரண தரம்) பரீட்சைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய ஆகக்குறைந்த அடிப்படை கல்வித் தகைமைகளாகும். அதற்கு மேலதிகமாக, ஒவ்வொரு பாடநெறிக்கும் விசேடமாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பாடத் தேர்ச்சிகள் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைக்கு அமைவாக, விண்ணப்பதாரர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட Z-புள்ளி ஒழுங்கு வரிசைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

(ஈ) ஏதேனும் ஒரு மாவட்டத்திலிருந்து அல்லது தேசிய அடிப்படையில் அந்தந்த பாடநெறிகளுக்காக ஆட்சேர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையில் உரிய ஒதுக்கீட்டிற்கு உரித்தான எண்ணிக்கையின் இரு மடங்கிற்குச் சமமான விண்ணப்பதாரர்கள், நிகழ்நிலை தரவு முறைமையில் உள்ள தகவல்களிலிருந்து கணினி நிகழ்ச்சித்திட்டமொன்றின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, சான்றிதழ்கள் மற்றும் தகுதிகளைப் பரிசோதிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அவர்களுள் தகைமை ஒழுங்கு வரிசைக்கு அமைய நிர்ணயிக்கப்பட்ட அளவான விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(உ) பாடநெறிகளுக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களும் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமானது என்பதுடன், ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான இயலுமைகள் இதன்போது பரிசோதிக்கப்படும்.

(ஊ) தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடாத்தப்படும் ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்ப்பதற்கான பொருந்தக்கூடிய கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய விசேட தகைமைகள் பின்வருமாறு.

**பாடநெறி இலக்கம் 01 - பொறியியல் தொழில்நுட்பம்**

4.1

4.1.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் மூன்றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங்களுள் ஒன்றையும் சேர்த்து மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.1.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் பௌதிக விஞ்ஞான பாடத்துறையின் கீழ் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

4.1.3 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஏனைய பாடத்துறைகளின் கீழ் இணைந்த கணிதம் அல்லது உயர் கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.1.4 3.0 இன் 3.3 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்குவரிசை

இந்த பாடநெறிக்காக ஆட்சேர்க்கப்படும் மொத்த எண்ணிக்கையில் 60% சதவீத மானோர் 4.1.1 இன் கீழ் விண்ணப்பித் துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்தும், 30% சதவீதமானோர் 4.1.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களி லிருந்தும், 10% சதவீதமானோர் 4.1.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களிலிருந்தும் என்ற வகையில் தகைமை ஒழுங்கு வரிசைப்படி தெரிவு செய்யப் படுவார்கள். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதுமான தகைமையுள்ளவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், 4.1.1, 4.1.2, 4.1.3 ஆகிய பாடத்துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு முறையே முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 02 - உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்**

4.2

4.2.1 2024 ஆம் ஆண்டிற்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் உயிர்முறை மைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறையில் மூன் றாவது பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பாடங் களுள் ஒன்றையும் சேர்த்து மூன்று (03) பாடங் களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.2.2 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் உயிரியல் பாடத்துறையின் கீழ் உயிரியல், பௌதிகவியல் / விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

4.2.3 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் ஏனைய பாடத்துறைகளின் கீழ் உயிரியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.2.4 3.0 இன் 3.3 இற்கு உரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்கு வரிசை

இந்தப் பாடநெறிக்காக ஆட்சேர்க்கப் படும் மொத்த எண்ணிக்கையில் 60% சதவீதமானோர் 4.2.1 இன் கீழ் விண்ணப் பித்துள்ள விண்ணப்பதாரர்களிலிருந்தும், 30% சதவீதமானோர் 4.2.2 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களி லிருந்தும், 10% சதவீதமானோர் 4.2.3 இன் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்களிலிருந்தும் என்ற வகையில் தகைமை ஒழுங்குவரிசைப்படி தெரிவு செய்யப் படுவார்கள். ஏதேனும் ஒரு பாடத்துறையின் கீழ் போதுமான தகைமையுள்ளவர்கள் இல்லாத சந்தர்ப்பங்களில், 4.2.1, 4.2.2, 4.2.3 ஆகிய பாடத்துறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுக்கு முறையே முன்னுரிமை கிடைக்கும் வகையில் மீதி வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

**பாடநெறி இலக்கம் 03 - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்**

4.3

4.3.1 2024 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரு பிரதான பாடமாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்துடன் வேறு ஏதேனும் இரண்டு பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

4.3.2 3.0 இன் 3.3 இற்குரிய தகைமைகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**கருத்தில் கொள்க:-**

ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரர்கள், அவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் பெற்றுள்ள தேர்ச்சி மற்றும் அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

- தெரிவு செய்வதற்கான முன்னுரிமை ஒழுங்கு வரிசை

(i) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடத்தில் 'A' சித்தியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

(ii) அதன் பின்னர் மேலும் நிலவும் வெற்றிடங்களுக்கு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் 'B' சித்தியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

(iii) மேலே இலக்கம் (ii) இன் கீழ் தெரிவு செய்த பின்னரும் நிலவும் வெற்றிடங்களுக்கு, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் 'C' சித்தியைப் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள், அப் பாடத்திற்குப் பெற்றுள்ள புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

## 5.0 பயிலுனர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை

5.1 தெரிவு செய்வதற்கான முறை

5.1.1 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்காக, 2029 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதால் பாடசாலை முறைமையில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை, தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் பாடங்களின் பன்முகத்தன்மையை ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு பாட ரீதியாக ஆசிரியர் தேவை கணக்கிடப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கை, 2026 ஆம் ஆண்டில் ஆசிரியப் பயிலுநர்களுக்காகக் கல்வியியல் கல்லூரியினுள் ஒரே நேரத்தில் வழங்கக்கூடிய வசதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டு, ஆட்சேர்க்கப்படும் ஆசிரியப் பயிலுநர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டுள்ளது

5.1.1.1 ஆட்சேர்க்கப்படும் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் பிரதான காரணி, ஒவ்வொரு பாடநெறிக்காகவும் கல்வியியல் கல்லூரியினுள் வசதிகளை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையாகும்.

5.1.1.2 அதற்கமைய, 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தரம்) பெறுபேறுகளின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு பின்வருமாறு இடம்பெறும்.

(i) ஆட்சேர்க்கப்படவுள்ள மொத்த வெற்றிடங்களில் 50% மாவட்ட அடிப்படையிலும், மீதி 50% தேசிய அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்படும். தேசிய மற்றும் மாவட்ட அடிப்படைகளுக்காக வெற்றிடங்களை ஒதுக்கும்போது தேசிய அடிப்படைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு பாடநெறிக்கு உரிய மாவட்டங்களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை, மாவட்ட அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பெற்றுள்ள Z-புள்ளி வரிசையுடன் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் முறையாக இணைத்து, 4.0 இன் ‘கருத்தில் கொள்க’ எனும் பந்தியில் மற்றும் அந்தந்த பாடநெறிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளுக்கு அமைய ஆட்சேர்க்கப்படுவார்கள்.

(iii) மாவட்ட அடிப்படையிலான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர், தேசிய மட்டத்திலான வெற்றிடங்களுக்கான தெரிவு இடம்பெறும். அதன்போது மீதியுள்ள விண்ணப்பதாரர்களுள் நாடளாவிய ரீதியில் அதிகூடிய

Z-புள்ளி வரிசையுடன் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகைமைகளையும் முறையாக இணைத்து, 4.0 இன் 'கருத்தில் கொள்க' எனும் பந்தியில் மற்றும் உரிய பாடநெறியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களுக்கு அமைய ஆட்சேர்க்கப் படுவார்கள்.

(iv) வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதன் பின்னர் மாவட்ட அடிப்படையில் வெற்றிடமொன்று ஏற்படுமாயின், தேசிய அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்ப தாரர்களுள் அந்த மாவட்டத்தின் தகைமை வரிசை மற்றும் விருப் புரிமைக்கு அமைய மாவட்ட வெற்றிடம் நிரப்பப்படும். அதன் போது தேசிய மட்டத்தில் வெற்றிட மொன்று ஏற்படுமாயின், அந்த வெற்றிடம் தேசிய மட்டத்தில் நிரப்பப்படும்.

5.1.2 குறித்த மாவட்டத்தின் அல்லது தேசிய அடிப்படையில் ஒரே Z-புள்ளிகளைப் பெற்றுள்ள பல மாணவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் போது, முதன்முறையாகத் தோற்றிய க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் 3.0 இன் 3.5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு (06) கட்டாயப் (பிரதான) பாடங்களில் பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கருத்திற்கொள்ளப்படும்.

அதற்கமைய, க.பொ.த. (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகளில் ஒரு சிறப்புச் சித்திக்கு 4 புள்ளிகளும், ஒரு அதி திறமைச் சித்திக்கு 3 புள்ளிகளும், ஒரு திறமைச் சித்திக்கு 2 புள்ளிகளும், ஒரு சாதாரண சித்திக்கு 1 புள்ளியும் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அந்த மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

5.1.3 மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யும் போது, ஏதேனும் ஒரு பாடநெறிக்காக ஒரு மாவட்டத்தின் கீழ் உள்ள முழுமையான தரவுத் தொகுதியிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்த போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், அந்த மாவட்டம் அமையப்பெற்றுள்ள மாகாணத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் உரிய திறமை வரிசையும், அதுவும் போதுமானதாக இல்லையெனில் முழு நாடளாவிய ரீதியிலான திறமை வரிசையும் கருத்திற்கொள்ளப்பட்டு அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

5.2 நிரந்தர வதிவிடத்தைத் தீர்மானித்தல் :

5.2.1 விண்ணப்பதாரர்களின் நிரந்தர வதிவிட மாவட்டம்/மாகாணம் பின்வரும் நடைமுறைக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

5.2.1.1 மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது, விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டமானது அவர் முதன்முறையாக க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் அவர் நிரந்தரமாக வசித்த மாவட்டமாகும்.

5.2.1.2 இதன்போது விண்ணப்பதாரர் முதன் முறையாக அல்லது அதற்குப் பின்னரான ஒரு தடவையில் க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அமைந்துள்ள, விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிடத்திற்கு வெளியே அமைந்துள்ள மாவட்டம்/ தனிப்பட்ட வசதி கருதி குறித்த காலப்பகுதிக்குள் தற்காலிகமாக வசித்த மாவட்டம்/ தற்போது வதிவிடம் வேறொரு மாவட்டத்திற்கு மாற்றப் பட்டிருப்பின் அந்த மாவட்டம் விண்ணப்ப தாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகக் கருதப்படமாட்டாது என்பது வலியுறுத் தப்படுகிறது.

5.2.1.3 மாகாணத் திறமை கருத்திற்கொள்ளப்படும் போது, விண்ணப்பதாரர் முதன்முறையாக க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் அதற்கு முன்னைய இரண்டு ஆண்டுகளிலும் அவர் நிரந்தரமாக வசித்த மாகாணம் விண்ணப்பிக்கும் மாகாணமாகக் கருதப்படும்

5.2.1.4 தேசிய அடிப்படையில்/ அகில இலங்கை ரீதியான திறமை வரிசை யைக் கருத்திற்கொள்ளும் போது நிரந்தர வதிவிடம் கருத்திற் கொள்ளப் படமாட்டாது.

5.2.2 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனது நிரந்தர வதிவிடத்தைப் பின்வரும் நடைமுறைக்கு உட்பட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

கருத்தில் கொள்க :-

- தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன், நேர்முகப் பரீட்சையின் போது வாக்காளர் இடாப்புத் தரவுகள் நிகழ்நிலை மூலமாக

சரிபார்க்கப்படவுள்ளதால், விண்ணப் பிக்கும் போது விண்ணப்பதாரர்கள் அது தொடர்பான எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. எனினும், நேர்முகப் பரீட்சையின் போது பின்வருமாறு உரிய உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.

I. ஆட்சேர்ப்பதற்கான அடிப்படைக்கு அமைவாக, விண்ணப்பதாரர்கள் தமது நிரந்தர வதிவிடத்தை வாக்காளர் இடாப்பில் தரவுகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

II. விண்ணப்பதாரரின் வயது பூர்த்தி யடையாத காரணத்தினால் வாக் காளர் இடாப்பில் பதிவு செய்ய முடியாமல் போன உரிய ஆண்டு களுக்காக, பெற்றோரின் பெயர்கள் உள்ளடங்கிய வாக்காளர் இடாப்புத் தரவுகள் மூலம் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

III. ஏதேனும் ஒரு காரணத்தினால் பெற்றோர் தவிர்ந்த வேறு ஒரு பாதுகாவலரின் கீழ் குறித்த காலப் பகுதியில் நிரந்தரமாக வசித்த விண் ணப்பதாரர்கள், அந்தப் பாதுகாவலர் உரிமையை அக் குறித்த காலப்பகுதியுடன் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிட மற்றும் நற்சான்றிதழின் (DS – 04) 'ஏனைய விடயங்கள்' எனும் நிரலின் கீழ் குறிப்பிட்டு, நேர்முகப் பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். இதன் போது விண்ணப்பதாரருக்கு வாக்குரிமை இல்லாத ஆண்டுகளுக் காகப் பாதுகாவலரின் வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதி விடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

IV. யாதேனும் ஒரு காரணத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்கோ அல்லது அவற் றுள் சில ஆண்டுகளுக்கோ வாக் காளர் பதிவு மேற்கொள்ளப்படா ததன் காரணமாக வாக்காளர் இடாப்பின் தரவுகள் மூலம் வதி விடத்தை உறுதிப்படுத்த முடி யாத சந்தர்ப்பங்களில், வாக் காளர் பதிவை மேற்கொள்ள முடி யாமைக்கான ஏற்றுக் கொள்ளத் தக்க காரணங்களை கிராம அலு வலரினால் வழங்கப்படும் வதிவிட மற்றும் நற்சான்றிதழின் (DS-04) 'ஏனைய விடயங்கள்' என்பதன் கீழ், அக்குறித்த காலப்பகுதியில் நிரந்தரமாக வசித்த பிரதேச கிராம அலுவலரின் கையொப் பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும்.

V. வாக்காளர் பதிவு மேற்கொள்ளப் படாததன் காரணமாக ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங் களுக்கு மாத்திரம் வாக்காளர் இடாப்பில் தரவுகள் காணப்படும் சந்தர்ப்பங்களில், மீதிக் காலப் பகுதிக்காக ஏற்றுக் கொள்ளத் தக்க ஏனைய ஆவணங்கள் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும். (உதாரணம்:- கிராம அலுவலர் சான்றிதழ், ஆட்பதிவுத் திணைக்களத்தின் அடையாள அட்டையிலுள்ள முகவரி).

VI. யாதேனும் ஒரு வகையில் மூன்று (03) ஆண்டுகளுக்கும் அல்லாமல் ஒரு வருடத்திற்கு மாத்திரம் விண் ணப்பதாரர் பதிவு செய்யப்பட் டிருப்பின், மீதி ஆண்டுகளுக்காகப் பெற்றோர்/ பாதுகாவலரின் வாக் குப்பதிவு எந்த மாவட்டத்தில் காணப்பட்ட போதிலும், விண்ணப்ப தாரரின் வாக்குப் பதிவிற்கே முன் னுரிமை அளிக்கப்படும்.

## 6.0 தெரிவு செய்தல் தொடர்பான ஏனைய விடயங்கள்

6.1. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், உரிய பாடநெறிகளுக்கான தகைமையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றுகள் மற்றும் சான்றிதழ்களின் மூல பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். குறித்த தினத்தில் எவ்வித அறிவித்தலுமின்றி நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காத அந்தந்த மாவட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பதிலாக, அந்தந்த மாவட்டத்திலிருந்து தகைமை வரிசைப்படி ஏனைய விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவதுடன், சமுகமளிக்காத விண்ணப்பதாரர்கள் குறித்து மீண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது

6.2 அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் கட்டாயமாகும் என்பதுடன், அன்றைய தினம் மூல பிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறும்

விண்ணப்பதாரர்கள் தெரிவு நடவடிக்கைகளின் போது கருத்திற்கொள்ளப்படமாட்டார்கள்.

6.3 பாடநெறியின் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை அடைவதற்கும் அதேபோன்று ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்கும் விண்ணப்ப தாரர்களிடம் இருக்க வேண்டிய உடல் மற்றும் உளத் தகைமை, கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியதிகளுக்கமைய முதலாவது நேர்முகப் பரீட்சையின் போது உரிய நேர்முகப் பரீட்சை சபையினால் பரிசோதிக்கப்படும். இதன்போது பாடநெறியைக் கற்பதற்கும் ஆசிரியர் தொழிலுக்குப் பிரவேசிப்பதற்கும் விண்ணப்பதாரரிடம் உள்ள உடல், உளத் தகைமை போதுமானதா என்பது குறித்த தமது பரிந்துரையை அவர்கள் முன்வைப்பார்கள்.

6.4 மேலே 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் தகைமை கொண்டுள்ள மற்றும் ஆட்சேர்ப்பதற்கான நியதிகளின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு அது குறித்து அறிவிக்கப்படும். அந்த விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர், விண்ணப் பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் உண்மைத்தன்மை மீண்டும் ஒருமுறை சரிபார்க்கப் படும். அதற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே உரிய தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியல் கல்லூரியின் குறித்த பாடநெறிக்காகப் பதிவு செய்யப்படுவார்கள். தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்யப்பட வேண்டிய திகதியிலிருந்து பத்து (10) அலுவலக நாட்களுக்குள் பதிவு செய்யத் தவறினால் அவருக்குரிய அனுமதி வாய்ப்பு இரத்தாகும். அதற்கமைய ஏற்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பிற்குரிய அடிப்படையின் கீழ், குறித்த தரவுத் தொகுதியில் உள்ள விண்ணப்பதாரர்கள் உரிய திறமை வரிசைப்படி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுத் தெரிவு செய்யப்படுவார்கள்.

6.4.1 எனவே, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிவு செய்யத் தவறும் விண்ணப்பதாரர்களினால் பின்னர் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

6.4.1.1 மேலே இலக்கம் 6.3 அல்லது 6.4 இன் கீழ் நேர்முகப் பரீட்சையின் போது பரிந்துரைகளை வழங்க முடியாத அளவிலான ஏதேனும் விசேட சிக்கல் நிலைமைகள் அவதானிக்கப்பட்டால் மாத்திரம், அவை கல்வி அமைச்சின் விசேட குழுவொன்றிற்கு அனுப்பி வைக்கப்படும். அந்த அறிக்கை கல்வியியல் கல்லூரிச் சபைக்கும்/ கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாள ருக்கும் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படும்

6.5. முதலாவது மற்றும் இரண்டாவது நேர்முகப் பரீட்சைகளில் தோற்றியதன் பின்னர் கல்வி யியல் கல்லூரிகளில் பதிவு செய்யத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், கல்லூரிக்குள் பிரவேசிப்பதற்கு முன்னர் தமது சுகாதார நிலையை உறுதிப்படுத்தும் மருத்துவப் பரிசோதனைக்குத் தோற்றுதல் வேண்டும்.

6.6. எந்தவொரு விண்ணப்பதாரரும் தமது தகைமை களுக்கேற்ப ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும். எனினும், திறமை வரிசைப்படி தகைமை பெறும் பாடநெறிகளுக்கு மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள் என்பதுடன், ஒன்றுக்கும் மேற்பட்ட பாடநெறிகளுக்குத் தெரிவாகத் தகைமை பெற்றுள்ள சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரின் பாடநெறி விருப்புரிமை வரிசைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு ஒரு பாடநெறிக்காக மாத்திரம் தெரிவு செய்யப்படுவார்.

6.7 தொழில்நுட்பவியலுக்கான தேசிய கல்வியியல் கல்லூரியின் ஏதேனும் ஒரு பாடநெறிக்காகப் பதிவு செய்ததன் பின்னர், யாதேனும் ஒரு வகையில் மற்றுமொரு தேசிய கல்வியியல் கல்லூரிப் பாடநெறிக்காகப் பிற்காலத்தில் தெரிவு செய்யப் பட்டால், அதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது

6.8 போதுமான ஆசிரியர் தேவை நிலவாத பாட நெறிகளை இரத்துச் செய்தல், ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஆசிரியப் பயிலுநர்களின் எண்ணிக் கையைத் தீர்மானித்தல் மற்றும் ஒவ்வொரு பாடநெறிகளையும் நிறுவனங்களுக்குள் நிலைப் படுத்துதல் தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரிச் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

7.0 பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவர்கள்

7.1 ஏற்கனவே அரசாங்க அல்லது அரசாங்க நிதியுதவி பெறும் உதவி பெறும் பாடசாலைகளில் அல்லது அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட பிரிவேனாக்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட

ஏனைய நிறுவனங்களில் ஆசிரியர் நியமனம் பெற்றுள்ளவர்கள்,

7.2. அரசாங்கப் பாடசாலையொன்றில் ஆசிரியர் நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள்,

7.3. தற்போதளவில் தேசிய கல்வியியல் கல்லூரியொன்றில் பாடநெறியொன்றைக் கற்றுக் கொண்டிருப்பவர்கள் அல்லது கற்றுக் கொண்டிருக்கும் போது விலகியவர்கள் அல்லது கற்று முடித்தவர்கள்,

7.4. அரசாங்கப் பல்கலைக்கழகமொன்றில் / அரசாங்கப் பல்கலைக்கழக நிறுவனமொன்றில் க.பொ.த. (உயர்தரம்) தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் பட்டப் பாடநெறி ஒன்றைக் கற்பதற்காக 'அரசாங்க இலவசக் கல்விச் சலுகையின்' கீழ் உள்வாரி மாணவராகப் பதிவு செய்துள்ளவர்கள் / கற்றுக்கொண்டிருப்பவர்கள் / பட்டப் பாடநெறியை கற்று முடித்தவர்கள்.

*கருத்தில் கொள்க* :-

பல்கலைக்கழக முதற்பட்டப் பாடநெறியைக் கற்பதற்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிகழ்நிலை முறைமையூடாகப் பதிவு செய்திருப்பதும் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதியற்றவராகக் கருதப்பட ஏதுவாகும்.

7.5 ஒழுக்காற்று காரணங்களுக்காக அல்லது ஏனைய காரணங்களுக்காகத் தேசிய கல்வியியற் கல்லூரியொன்றிலிருந்து மாணவர் அந்தஸ்து இரத்துச் செய்யப்பட்டவர்கள்.

7.6 திருமணம் பதிவு செய்யப்பட்ட அல்லது விவாகரத்து பெற்ற விண்ணப்பதாரர்கள்.

**8.0 பாடநெறிக்கான நிபந்தனைகள்:**

8.1 பாடநெறிக் காலம் நான்கு ஆண்டுகளாகும். இது தேசிய கல்வியியற் கல்லூரியில் மூன்று ஆண்டுகால வதிவிட நிறுவனம் சார்ந்த பயிற்சியையும், பாடசாலை மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் சார்ந்த 12 மாத கால பயிலுனர் பயிற்சியையும் உள்ளடக்கியதாகும். மூன்றாம் ஆண்டு இறுதியில் நடாத்தப்படும் இறுதி வெளிவாரிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, ஆசிரியப் பயிலுநரின் வருகை 90% க்கும் குறையாமல் இருத்தல் கட்டாயமாகும்.

8.2 ஒவ்வொரு ஆசிரியப் பயிலுநரும் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளில் நடாத்தப்படும் உள்வாரித் தொடர் மதிப்பீடுகள், உள்வாரிப் பரீட்சைகள் மற்றும் இறுதி வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

8.3 ஆசிரியப் பயிலுநர் ஒருவர் தங்கியிருந்து கல்வி கற்கும் மூன்று ஆண்டுகளில், ஒரு ஆண்டின் பத்து (10) மாதங்களுக்கு, ஒரு மாதத்திற்கு ரூ. 10,500.00 பெறுமதியான உணவு மற்றும் வதிவிட வசதிகள் வழங்கப்படும். பயிலுனர் பயிற்சி ஆண்டின் பத்து (10) மாதங்களுக்கு, ஒரு மாதத்திற்கு ரூ. 10,500.00 வீதம் கொடுப்பனவு வழங்கப்படும். தனிப்பட்ட தேவைகளுடன் தொடர்புடைய ஏனைய செலவுகளை ஆசிரியப் பயிலுநரே பொறுப்பேற்க வேண்டும்.

8.4 தேசிய கல்வியியற் கல்லூரியொன்றில் பதிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், பாடநெறிக்காகச் செலவிடப்படும் தொகை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருடன் பதினைந்து இலட்சம் ரூபா (1,500,000.00) பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட வேண்டும். விண்ணப்பதாரர் தொழில்நுட்பவியல் தேசிய கல்வியியல் கல்லூரியில் பதிவு செய்த திகதியிலிருந்து அறுபது (60) நாட்காட்டி நாட்களுக்குள்பாடநெறியிலிருந்துவிலகுவாராயின், அவர் சார்பாக மேற்கொள்ளப்பட்ட செலவை அரசாங்கத்திற்கு மீளச் செலுத்திவிட்டு விலக முடியும். விண்ணப்பதாரர்கள் கல்லூரியில் பதிவு செய்த திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குப் பின்னர் விலகும் போது, இந்தப் பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். மேலும், யாதேனும் ஒரு விண்ணப்பதாரர் எவ்வித முறையான அறிவித்தலுமின்றி ஒரு மாதத்திற்குக் குறையாத காலம் பாடநெறியின் கல்வி நடவடிக்கைகளில் கலந்துகொள்ளத் தவறினால், அவர் பாடநெறியிலிருந்து விலகியவராகக் கருதப்பட்டு, பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகையான ரூ. 1,500,000.00 அரசாங்கத்தினால் அறவிடப்பட்டதன் பின்னர் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார்.

பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர் அரசாங்கப் பாடசாலையொன்றுக்கு வழங்கப்படும் ஆசிரியர் நியமனத்தை ஏற்க மறுத்தால், பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். மேலும், பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து அரசாங்கப் பாடசாலை நியமனத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஐந்து (05) ஆண்டுகள் அரசாங்கச் சேவையில் ஈடுபடாத ஒருவர், ஐந்து ஆண்டுகளில் மீதமாக

உள்ள சேவைக்காலத்திற்கு (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) உரிய தொகையை அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும்.

அத் தொகை: ரூ 1,500,000 x பூர்த்தி செய்ய மீதமாக உள்ள மாதங்களின் எண்ணிக்கை / 60 மாதங்கள்

எனக் கணிப்பிடப்படும்.

8.4.1 விசேட மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் பாடநெறிக் காலப்பகுதியில் குறித்த பாடநெறியிலிருந்து விலகுவாராயின், பின்வரும் ஆவணங்கள் மூலம் நோயின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்:

- நோய் நிலைமைக்காகப் பெற்றுக்கொண்ட சிகிச்சைகளுடன் தொடர்புடைய ஏற்றுக்கொள்ளத்தக்க மருத்துவ அறிக்கைகள்;
- கற்றல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் போதுமான சுகாதார நிலைமை இல்லையென அரசாங்க வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம்.

குறித்த ஆவணங்களைக் கருத்திற்கொண்டு, கல்வியியல் கல்லூரியின் முகாமைத்துவக் குழுவினால் அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதன் பின்னர், கல்வி அமைச்சின் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றின் மற்றும் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்படும் அரசாங்க வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவரின் அல்லது வைத்தியச் சபையின் பரிந்துரைகளைப் பெற்று, அதற்காக கல்வியியல் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அறவீடுகள் ஏதுமின்றி பாடநெறியிலிருந்து விலகுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

8.4.2 சட்டப்பூர்வமாகப் பாடநெறியிலிருந்து விலகினாலன்றி, பாடநெறிக் காலப்பகுதியிலோ அல்லது நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்கப்படும் வரையிலான காலப்பகுதியிலோ வெளிநாடு செல்வதற்கு எந்தவொரு ஆசிரியப் பயிலுநருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.5 பாடநெறிக் காலப்பகுதியில் ஒழுக்காற்று காரணங்களுக்காக அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது போலித் தகவல்களைச் சமர்ப்பித்தமைக்காக அல்லது 7.0 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விண்ணப்பிப்பதற்கு அல்லது அனுமதி பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்கள் எனும் பந்திக்கு அமைவாக உண்மையான தகவல்களை மறைத்தமைக்காகப் பாடநெறியிலிருந்து நீக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களில், ஒப்பந்தம் மற்றும் பிணைமுறையின் முழுத் தொகையையும் (ரூ. 1,500,000.00) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8.6 பாடநெறி நடைபெறும் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநர் ஒருவருக்கு 7.4 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ளவாறான பாடநெறியொன்றைக் கற்பதற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டாது. அவ்வாறு பாடநெறியொன்றில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்பட்டால், ஆசிரியப் பயிலுநர் கையொப்பமிட்ட பிணைமுறி மற்றும் ஒப்பந்தத்தின் முழுப் பெறுமதியையும் (ரூ. 1,500,000.00) அறவிட்டுப் பாடநெறியிலிருந்து நீக்கப்படுவார்.

8.7 வர்த்தமானி அறிவித்தலின் 7.4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வேறு ஏதேனும் அரசாங்க உயர்கல்வி நிறுவனமொன்றில் தொழிற் பயிற்சி பாடநெறி / டிப்ளோமா அல்லது உயர் டிப்ளோமா பாடநெறியொன்றுக்காகப் பதிவு செய்துள்ள/ கற்றுக்கொண்டிருக்கின்ற விண்ணப்பதாரர்கள், கல்வியியற் கல்லூரிப் பிரவேசத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டால், அதற்காகப் பதிவு செய்யும் தினத்தில் குறித்த நிறுவனத்தில் தாம் பதிவு செய்துள்ள / கற்றுக்கொண்டிருக்கின்ற பாடநெறியிலிருந்து முறையாக விலகியுள்ளதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைக் கல்வியியல் கல்லூரியிடம் ஒப்படைப்பது கட்டாயமாகும். இதனைச் செய்யத் தவறும் விண்ணப்பதாரர்கள் கல்வியியல் கல்லூரிக்குள் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

8.8 பாடநெறிக் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநர் திருமணத்தைப் பதிவு செய்தால் அல்லது விண்ணப்பிக்கும் போது / கல்வியியல் கல்லூரிப் பதிவிற்கு முன்னர் திருமணம் பதிவு செய்யப் பட்டுள்ளமை / விவாகரத்து பெற்றுள்ளமை உறுதிப் படுத்தப்பட்டால் மாணவர் அந்தஸ்து ரத்துச் செய்யப்படும். திருமணம் செய்துள்ளமை கண்டறியப்பட்ட பின்னர், பல்வேறு காரணங்களைக் கூறி பாடநெறிக் காலப்பகுதியில் விவாகரத்து பெறுபவர்களுக்கு மீண்டும் மாணவர் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது.

8.9 பாடநெறிக் காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் நடத்தை, வரவு, ஆர்வம் மற்றும் கல்வி நடவடிக்கைகளில் (இணைப் பாடவிதான செயற்பாடுகள் உட்பட) முன்னேற்றத்தைக் காட்டாத ஆசிரியப் பயிலுநர் ஒருவர் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார். அத்துடன், நிறுவன ரீதியான பயிற்சியின் முதலாம்

ஆண்டில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டில் திருப்தி கரமான மட்டத்தை எட்டத் தவறினால் பாட நெறியிலிருந்து நீக்கப்படுவார். இது தொடர்பான கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

8.10 பாடநெறிக் காலப்பகுதியில் ஆசிரியப் பயிலுநரின் உடல் மற்றும் உளத் தகைமை தொடர்பாக பீடாதிபதியிடமிருந்து அல்லது பயிலுனர் பயிற்சிக் காலப்பகுதியில் அதிபரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைப்பின், அவர் மீண்டும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார். அதன் அறிக்கை கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதித் தீர்மானம் வழங்கப்படும்.

8.11 பாடநெறிக் காலப்பகுதியில், கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்று விதிகளுக்கு முரணான ஏதேனும் செயல்களில் ஈடுபட்டமை உறுதிப் படுத்தப்பட்டால், அது தொடர்பாகக் கல்வியியற் கல்லூரியின் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரை களுக்கமைய ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் வகுப்புத் தடை விதித்தல் / பாடநெறிக் காலத்தை நீடித்தல் / பாடநெறியிலிருந்து நீக்குதல் / ஏனைய பொருத்த மான தண்டனைகளுக்கு உட்படுத்தும் அதிகாரம் கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உள்ளது.

8.12 பாடநெறியைக் கற்றுக்கொண்டிருக்கும் காலப் பகுதியில், உரிய ஆசிரியப் பயிலுநர்களுக்கு வாரநாட்களிலோ அல்லது வார இறுதி நாட் களிலோ வேறு எந்தவொரு பாடநெறியையும் கற்பதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

8.13 கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள் தமது சேவை யின் முதல் ஐந்து ஆண்டுகளுக்குள், யாதேனும் ஒரு காரணத்திற்காகச் சேவையிலிருந்து விலகு வார்களாயின் அல்லது சேவையிலிருந்து விலகி வெளிநாடு செல்வார்களாயின், உரிய பிணை முறி மற்றும் ஒப்பந்தத்தின் பிரகாரம் முழுப் பெறுமதியிலிருந்து (ரூ. 1,500,000.00) எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய தொகையை (மாத அடிப்படையில் கணக்கிடப்பட்டு) அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். அத்தொகை பின்வருமாறு கணக்கிடப்படும்,

| ரூ 1,500,000 | x | பூர்த்தி செய்ய எஞ்சியுள்ள |
|---|---|---|
| 60 மாதங்கள் | | மாதங்களின் எண்ணிக்கை |

**கருத்தில் கொள்க :**

- முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் பந்தி 8.13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையிலிருந்து விலகினால், மீண்டும் ஒரு தேசிய கல்வியியல் கல்லூரி கல்வியியற் பட்டதாரியாக ஆசிரியர் தொழிலில் இணைவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

- அரசாங்கப் பாடசாலையொன்றில் முதல் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (05) ஆண்டு காலச் முனைப்புடன் கூடிய சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத பட்சத்தில், அந்தத் தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர் உரிய விரிவான பட்டச் சான்றிதழுக்கு விண்ணப்பிப் பதற்குத் தகுதியற்றவராவார்.

- ஆசிரியர் சேவையின் முதல் ஐந்து ஆண்டு களைப் பூர்த்தி செய்யாத, தகுதிகாண் காலத்திற்கு உட்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள், கல்விச் செயலாளரின் 24/2017 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், ஒப்பந்தம், பிணை முறி, தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் குறித்த காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளுக்கு அமைவாகவும் கல்வி நடவடிக் கைகளுக்காக மாத்திரம் சம்பளமற்ற விடு முறையில் வெளிநாடு செல்ல முடியும்.

- ஆசிரியர் சேவையின் முதல் ஐந்து ஆண்டு களைப் பூர்த்தி செய்யாத, ஆனால் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி கல்விமானி பட்டதாரி ஆசிரியர்கள், கல்விச் செயலாளரின் 24/2017 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்தின் பிரகாரமும் வர்த்தமானி அறிவித்தல், ஒப்பந்தம், பிணைமுறி, தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16 ஆம் பிரிவு மற்றும் குறித்த காலப்பகுதியில் நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கு அமை வாகவும் கல்வி அல்லது தொழில் வாய்ப்பு நடவடிக்கைகளுக்காகச் சம்பளமற்ற விடு முறையில் வெளிநாடு செல்ல முடியும்.

8.14 பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் ஆசிரியப் பயிலுநர்களுக்குக் கல்வி மாணி பட்டம் வழங்கப்படும். பாடநெறி சார்ந்த வேலைகள் மற்றும் ஆளுமை விருத்தி (கட்டாயமாகப் பங்கேற்க வேண்டிய இணைப் பாடவிதான செயல்பாடுகள் உட்பட) பாட நெறிக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக மதிப் பிடப்படும் என்பதுடன், இந்த மதிப்பீடுகள்

பட்டத்தை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் இறுதி மதிப்பீட்டின் ஒரு பகுதியாக அமையும்.

8.15 கல்விமானி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஆசிரியப் பயிலுநர்களுக்கு அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும். அவர்கள் மாவட்ட / மாகாண/ தேசிய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட போதிலும், இடமாற்றம் வழங்கும் போது அந்தந்த மாவட்டங்களில் அல்லது மாகாணங்களில் வெற்றிடங்கள் இல்லையெனில், நாட்டின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு அவர்கள் உடன்படுதல் வேண்டும். இடமாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு, கல்வியியற் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

8.15.1 பாடநெறிகளுக்கான தெரிவு நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள், மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு உடன்படுவதாயின் மாத்திரமே அந்த நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும்.

8.15.2 மேலுள்ள நிபந்தனைகளின் கீழ் பாடநெறியைக் பயிலும் விண்ணப்பதாரர்கள், தாம் பயிலும் பாடநெறிக்குரிய பாடத்தைக் கற்பிப்பதில் கட்டாயமாக ஈடுபடுதல் வேண்டும். மேலும், கல்விமானி பட்டத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர், மாவட்ட / மாகாண / தேசிய அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரர்கள், தமது முதல் நியமனத்தைப் பெறும் - அதாவது தமது நிரந்தர வதிவிட மாவட்டத்திலோ / நிரந்தர வதிவிட மாகாணத்திலோ அல்லது தேசிய அடிப்படையில் பெயரிடப்படும் மாவட்டத்திலோ அல்லது முதல் நியமனம் வழங்கப்படும் வேறு ஏதேனும் மாவட்டத்திலோ / மாகாணத்திலோ - முதல் நியமனத் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் சேவை செய்வதைக் கட்டாய சேவை நிபந்தனையாகக் கருதி, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருடன் பிணைமுறி மற்றும் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும்.

8.16 ஆட்சேர்ப்பு நடைமுறையைச் செயற்படுத்தும் போது, அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு ஆசிரியர் பயிலுநரினால் அல்லது அவருடன் தொடர்புடைய வேறு ஏதேனும் தரப்பினரினால் மேற்கொள்ளப்படும் முறையற்ற அழுத்தங்கள், அவரைச் ஆட்சேர்ப்பதற்கு தகுதியற்ற ஒரு காரணியாகக் கருதப்படும்.

8.17 விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பிக்கப்படும் பாடநெறிகளுடன் தொடர்புடைய அனைத்துக் கல்வி மற்றும் ஏனைய தகைமைகளும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ (2026.05.22) அல்லது அதற்கு முன்னரோ பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8.18 கல்வியியற் கல்லூரியின் ஏதேனும் ஒரு பாடநெறிக்குரிய மொழியில், குறித்த மாவட்டத்திலிருந்து ஆட்சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு மாவட்ட/ மாகாண/ தேசிய திறமை வரிசைப்படி தகுதியுள்ளவர்கள் போதாதிருப்பின், அந்தச் சம்பந்தப்பட்ட கல்லூரியில் நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய பாடநெறிகளுள் கல்வி முறைமையில் அதிக ஆசிரியர் தேவையுள்ள பாடநெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் வகையில், அந்தந்தப் பாடநெறிகளின் கீழ் தேசிய அடிப்படையில் தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து மீதியாக உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

8.19 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் கல்வி அமைச்சின் இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும். இது தொடர்பாக அவதானத்துடன் இருப்பது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். இந்த நேர்முகப் பரீட்சையில் பங்கேற்பது என்பது சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான ஒரு உரிமையாகாது என்பதையும் விண்ணப்பதாரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

9.0 விண்ணப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள் :

- வர்த்தமானி அறிவித்தலின் 12.0 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, ஒவ்வொரு பாடநெறிக்கும் ஆட்சேர்க்கப்படு எண்ணிக்கை குறித்து மிகவும் தெளிவான புரிதலைப் பெற்று அதற்கேற்ப விண்ணப்பித்தல் வேண்டும்.

9.1 மிகவும் முக்கியமானது:

9.1.1 அனைத்து விண்ணப்பதாரர்களும் நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும்.

**கருத்தில் கொள்க** : விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

9.1.2 நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பிக்கும் போது ஆங்கில மொழியில் மாத்திரமே விண்ணப்பித்தல் வேண்டும். அதற்கமைய, குறித்த நிகழ்நிலை நிகழ்ச்சித்திட்டத்திற்குள் நுழைவதற்குப்

பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி, உரிய வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் விண்ணப் பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

https://ncoe.moe.gov.lk/NcoeTech App/

9.2 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மிகவும் கவனமாக வாசித்து, மிகவும் சரியான தரவுகளை வழங்குவதற்கான முழுப் பொறுப்பும் விண்ணப்பதாரரையே சாரும். குறிப்பாக, விண்ணப்பித்த பாடநெறிகள் தொடர் பான தகவல்கள் அல்லது ஏனைய திருத்தங்களை மேற்கொள்வதற்காகப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க.

9.3 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள், தகைமைகள் மற்றும் வெற்றிடங் களின் எண்ணிக்கை குறித்து விசேட கவனம் செலுத்தி, ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அதிகபட்சமாக இரண்டு (02) பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

9.4 வர்த்தமானி அறிவித்தலின் 5.2 – 'நிரந்தர வதிவிடத்தை தீர்மானித்தல்' என்பதன் கீழ் 5.2.1 ஆம் பந்திக்குத் தொடர்புடைய மாவட்டங்களுக்கான இலக்கங்கள் பின்வருமாறு அமையும்.

- குறித்த மாவட்ட இலக்கம் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி, விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டத்திற்குரிய இலக்கத்தை மிகவும் சரியாக உள்ளீடு செய்ய வேண்டும்.

| *மாவட்டம்* | *மாவட்ட இலக்கம்* |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கிளிநொச்சி | 11 |
| மன்னார் | 12 |
| வவுனியா | 13 |
| முல்லைத்தீவு | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகலை | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

9.5 விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் யாதேனும் ஒரு விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி (Personal E-mail Address) இல்லை யெனில், நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பிப்பதற்கு முன்னர் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரியொன்றைத் தயாரித்துக்கொள்வது கட்டாயமாகும். இந்த மின்னஞ்சல் முகவரி விண்ணப்பதாரருக்குரிய தனிப் பட்ட முகவரியாக அமைந்திருத்தல் வேண்டும்.

9.6 அவ்வாறே, யாதேனும் ஒரு பாடநெறிக்கு வர்த்த மானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தகை மைகள் இல்லாது விண்ணப்பித்த பின்னர், அதன் மூலம் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரி யங்கள் குறித்து கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு எவ்விதப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது.

9.7 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நிகழ்நிலை முறைமையின் (Online System) ஊடாக விண்ணப்பித்த பின்னர், அந்த விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை அச்சிட்டுப் பெற்றுக் கொள்வதற்கான வசதி விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றுக்கொள்ளப் படும் நிரந்தர அச்சுப் பிரதி (Hard Copy - PDF) தத்தம் வசம் வைத்திருக்க வேண்டும். யாதேனும் ஒரு விசாரணை அல்லது மேன்முறையீட்டை முன்வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறித்த ஆவணத்தின் நிழற்படப் பிரதியொன்று சமர்ப்பிக் கப்பட வேண்டும்.

இது குறித்து கவனமின்றி செயற்படுவதால் விண்ணப்பதாரருக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாகக் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு எவ்விதப் பொறுப்பையும் ஏற்கமாட்டாது.

9.8 விண்ணப்பதாரர் ஒருவர் விண்ணப்பிப்பதன் மூலம் மாத்திரம் அனுமதிக்கப்படுவதற்கான தகுதி பெறமாட்டார். மேலும், அந்தந்த மாவட்ட அல்லது தேசிய அடிப்படையிலான வெற்றிடங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக மாத்திரமே ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். இது தொடர்பான இறுதித் தீர்மானம் கல்வியியல் கல்லூரி சபை/ கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.

9.9 விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் போலியானவை அல்லது மோசடியானவை எனப் பின்னர் கண்டறியப்பட்டால், அவர் பாடநெறியிலிருந்து/ சேவையிலிருந்து நீக்கப்படுவதுடன், அதன் பின்னர் அரசாங்க சேவையின் எவ்வித நியமனத்தைப் பெறுவதற்கும் அவர் தகுதியற்றவராவார்.

10.0 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகள் அல்லது விசேட சந்தர்ப்பங்கள் குறித்த கல்வியியல் கல்லூரிகள் சபை / கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

11.0 இந்த வர்த்தமானி அறிவித்தலின் சிங்கள மொழி வசனங்களுக்கும் தமிழ் அல்லது ஆங்கில மொழி வசனங்களுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், சிங்கள மொழி மூலமான வசனமே செல்லுபடியாகும்.

நாலக களுவெவ,
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பத்தரமுல்ல,
2026, மே 20.

இணைப்பு 1

**2026 ஆம் ஆண்டிற்கான 2024 க.பொ.த. (உயர்தர) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய மற்றும் மாவட்ட அடிப்படையில் தேசிய தொழில்நுட்ப கல்வியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய மாணவ பயிலுனர்களை சேர்த்தல்**

| பாடத்தின் பெயர் | தேசிய அடிப்படையில் | மேல் | | | மத்திய | | | தென் | | | வடக்கு | | | | | கிழக்கு | | | வட மேல் | | வட மத்திய | | ஊவா | | சப்பிர கமுவ | | மாவட்ட மொத்தம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கொழும்பு | கம்பஹா | களுத்துறை | கண்டி | மாத்தளை | நுவரெலியா | காலி | மாத்தறை | அம்பாந்தோட்டை | யாழ்ப்பாணம் | மன்னார் | வவுனியா | முல்லைத்தீவு | கிளிநொச்சி | மட்டக்களப்பு | அம்பாறை | திருகோணமலை | குருநாகல் | புத்தளம் | அநுராதபுரம் | பொலநறுவை | பதுளை | மொணராகலை | இரத்தினபுரி | கேகாலை | | |
| பொறியியல் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 2 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 35 | 70 |
| உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (A/Level) | 35 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 2 | 35 | 70 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (A/ Level) | 35 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 2 | 1 | 1 | 2 | 1 | 2 | 35 | 70 |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தம் | 105 | 6 | 4 | 4 | 5 | 4 | 4 | 4 | 4 | 4 | 5 | 3 | 4 | 3 | 3 | 4 | 4 | 4 | 5 | 4 | 5 | 4 | 4 | 5 | 4 | 5 | 105 | 210 |

05-360

திருத்தம்

## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## இலங்கை திட்டமிடல் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

இலக்கம் 2,485 இனைக் கொண்ட 2026.04.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட "இலங்கை திட்டமிடல் சேவை தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026" இற்கான பரீட்சை அறிவித்தலின் தொடரிலக்கம் 5 இன் தகைமைகளின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 5.2 அனுபவம் தொடர்பான பிரிவு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

"தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தல், வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ மேலே 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன், அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் சம்பளக் குறியீட்டு இலக்கம் MN -1-2025 அல்லது அதற்கு மேற்பட்ட MN சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறும் (முன்னர் சம்பளக் குறியீட்டு இலக்கம் MN - 1 அல்லது அதற்கு மேற்பட்ட MN சம்பளக் குறியீடுகளின் கீழ் சம்பளம் பெற்று, பின்னர் அச்சம்பளக் குறியீடு வேறொரு சம்பளக் குறியீட்டிற்கு திருத்தப்பட்ட சேவைகள்/ பதவிகள் உள்ளடங்கலாக) அல்லது SL - 1 - 2025 சம்பளக் குறியீட்டு இலக்கத்தின் கீழ் சம்பளம் பெறும் சேவையில் / பதவியில் ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூரத்தி செய்திருத்தல் வேண்டும்."

02. இவ் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் விண்ணப்பதாரர்கள் இவ் ஆட்சேர்ப்பிற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதி திருத்தப்படமாட்டாது. அதன் பிரகாரம், ஆட்சேர்ப்பிற்காகக் கருத்திற் கொள்ளப்படும் அனைத்துத் தகைமைகளும் ஆரம்ப விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியான 2026.04.17 ஆந் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

03. மேலும், 2026.04.17 ஆந் திகதிய ஆரம்ப விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன், இத்திருத்தத்தின் காரணமாக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026, யூன் மாதம் 18 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

04. இப்பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்
கட்டளையின் பிரகாரம்,

எஸ். ஆலோகபண்டார,
செயலாளர்,
பொது நிர்வாக, மாகாண
சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2026, மே 21.

05-369

---

திருத்தம்

## தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்

## தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத/ தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,487 மற்றும் 2026.04.30 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட “தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை- 2026" எனும் தலைப்பிலான அறிவித்தலின் 02 ஆம் பந்தி மற்றும் 10 ஆம் பந்தியின் 10.3 உப பந்திக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் பந்திகளை பதிலீடு செய்வதனூடாக அந்த அறிவித்தல் திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

I. 02 ஆம் பந்தி -
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆகுமென்பதோடு, அன்றைய திகதியன்று விண்ணப்பதாரிகளின் வயது 18 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டுமென்ப தோடு 30 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

II. 10 ஆம்பந்தியின் 10.3 உப பந்தி -

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில்

2026.06.15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம்:1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

02. அதங்கிணங்க, விண்ணப்பகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

எம். எம். ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,
இலக்கம் :1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட,
2026, மே 18.

05-340/1

---

திருத்தம்

**தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்**

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத/ தொழில்நுட்பம்சார் சேவை வகுதியின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,487 மற்றும் 2026.04.30 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026" எனும் தலைப்பிலான அறிவித்தலின் 02 ஆம் பந்தி மற்றும் 10 ஆம் பந்தியின் 10.3 உப பந்திக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் பந்திகளை பதிலீடு செய்வதனூடாக அந்த அறிவித்தல் திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

I. 02 ஆம் பந்தி -

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆகும்.

II. 10 ஆம்பந்தியின் 10.3 உப பந்தி -

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.06.15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக "தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு "பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம்:1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

02. அதங்கிணங்க, விண்ணப்பகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

எம். எம். ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,
இலக்கம் :1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட,
2026, மே 18.

05-340/2

---

திருத்தம்

**தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்**

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் கள/ அலுவலக பிரிவு I சேவை வகுதியின் சமூகவியலாளர் தரம் II பதவிக்கு (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2,487 மற்றும் 2026.04.30 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் கள/ அலுவலக பிரிவு I சேவை வகுதியின் சமூகவியலாளர் தரம் II (திணைக்கள மயப்படுத்தப்பட்ட) பதவிக்கு

ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026 எனும் தலைப்பிலான அறிவித்தலின் 02 ஆம் பந்தி மற்றும் 10 ஆம் பந்தியின் 10.3 உப பந்திக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்படும் பந்திகளை பதிலீடு செய்வதனூடாக அந்த அறிவித்தல் திருத்தப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்களில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

I. 02 ஆம் பந்தி -

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆகுமென்பதோடு, அன்றைய திகதியன்று விண்ணப்பதாரிகளின் வயது 21 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். உச்சளவு வயதெல்லை ஏற்புடையதாகாது.

II. 10 ஆம்பந்தியின் 10.3 உப பந்தி -

சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.06.15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக " சமூகவியலாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" எனக் குறிப்பிட்டு “பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இலக்கம்: 1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட” எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

02. அதங்கிணங்க, விண்ணப்பகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.15 ஆந் திகதி வரை நீடிக்கப் படுகின்றது.

எம். எம். ஆனந்த விஜித்த குமார மாப்பா,
பணிப்பாளர் நாயகம்.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம்,
இலக்கம் :1114,
பன்னிபிட்டிய வீதி,
தலவத்துகொட,
2026, மே 18.

05-340/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.